# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு பற்றிய அறிவித்தல்

## பொருளடக்கம்


1. அடிப்படை விதிமுறைகள் ........ 3
2. நாங்கள் சேகரிக்கும் தகவல் வகைகள், எப்படியானவை மற்றும் ஏன் அவை சேகரிக்கப்படுகின்றன ........ 3
3. உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வாறு பாதுகாக்கிறோம் ........ 6
4. உங்கள் தனிப்பட்ட தரவை எவ்வளவு காலம் வைத்திருக்கிறோம் ........ 6
5. உங்கள் தனிப்பட்ட தரவை வெளிப்படுத்துதல் ........ 7
6. உங்கள் தனிப்பட்ட தரவை இலங்கைக்கு வெளியே பரிமாற்றுதல் ........ 7
7. தன்னியக்க தீர்மானம் மேற்கொள்ளும் முறைமைகளின் பயன்பாடு ........ 8
8. உங்கள் உரிமைகள் ........ 8
9. எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் ........ 10

*தரவுப் பாதுகாப்பு பற்றிய இந்த அறிவித்தலானது, 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) கீழ் ஒரு தரவுக் கட்டுப்பாட்டாளராக கார்கில்ஸ் வங்கி பீஎல்சி, உங்கள் தனிப்பட்ட தரவை எவ்வாறு கையாளுகிறது என்பதை விளக்குகிறது. இது நாம் என்ன தகவல்களைச் சேகரிக்கிறோம், எப்படி, ஏன் அதைப் பயன்படுத்துகிறோம், யாருடன் அதனைப் பகிர்ந்து கொள்கிறோம், அதை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கிறோம் என்பதை உள்ளடக்கியுள்ளது. எங்கள் திட்டங்கள் அல்லது சேவைகளைப் பற்றி விசாரிக்கும், பயன்படுத்தும் அல்லது பயன்படுத்திய எவருக்கும் இந்த அறிவிப்பு ஏற்புடையதாகும் என்பதுடன், காலத்திற்கு காலம் புதுப்பிக்கப்படலாம்.*

1. ***அடிப்படை விதிமுறைகள்***

*இந்த அறிவிப்பு "நாம்", "எமக்கு" அல்லது "எங்கள்" என்பதைப் பயன்படுத்தும்போது, அது தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) கீழ் தரவுக் கட்டுப்பாட்டாளர் என்ற வகையில், உங்கள் தனிப்பட்ட தரவு எவ்வாறு, ஏன் செயன்முறைப்படுத்தப்படுகிறது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள கார்கில்ஸ் வங்கி பீஎல்சியைக் குறிக்கிறது.*

*"நீங்கள்" அல்லது "உங்கள்" என்பது சாத்தியமான, தற்போதைய அல்லது முன்னாள் வாடிக்கையாளர், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது எங்கள் இணையத்தளம் அல்லது சமூக ஊடகப் பக்கங்களைப் பார்வையிடும் எந்த ஒருவரையும் குறிக்கிறது. "தரவு விடயமாக", உங்கள் தனிப்பட்ட தரவு சம்பந்தப்பட்டிருந்தால் இந்த அறிவிப்பு உங்களுக்கு ஏற்புடையதாகும்; இருப்பினும், நிறுவனங்கள் பற்றிய தரவு அல்லது பெயர்குறிப்பிடப்படாத அல்லது ஒரு மனிதனை அடையாளம் காண முடியாத தரவு போன்ற தனிப்பட்ட அல்லாத தரவுகளுக்கு இது ஏற்புடையதாகாது.*

*எங்கள் "திட்டங்கள் மற்றும் சேவைகளில்" கணக்குகள், கடன்கள், கிரெடிட் கார்டுகள் மற்றும் கார்கில்ஸ் வங்கி பிஎல்சியின் இதே போன்ற அளிப்புகள் அடங்கும்.*

2. ***நாங்கள் சேகரிக்கும் தகவல் வகைகள், எப்படியானவை மற்றும் ஏன் அவை சேகரிக்கப்படுகின்றன***

*உங்கள் நிதித் தேவைகள் மற்றும் எங்கள் வர்த்தகத் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான மற்றும் அவசியமான தனிப்பட்ட தரவை எப்போதும் ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்க நாங்கள் சேகரிக்கிறோம். தனிப்பட்ட தரவை உங்களிடமிருந்து, எங்கள் திட்டங்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படபவற்றிலிருந்து (உ-ம், விண்ணப்பங்கள், கருத்துக்கணிப்புகள், கிளைக்கான விஜயங்கள்) நேரடியாகச் சேகரிக்கலாம், மேலும் தொழில்தருணர்கள், நிதி நிறுவனங்கள், கடன் அறிக்கையிடல் முகவர் அமைப்புகள், பொது மூலங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறலாம்.*

நாங்கள் செயன்முறைப்படுத்தும் தனிப்பட்ட தரவு, உங்களுக்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான நிதிச் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான பரந்த அளவிலான தகவல்களை உள்ளடக்கியது. இதில் பின்வருவன உள்ளடங்கும்:

- ***அடையாளம் மற்றும் தொடர்பு விபரங்கள்**: உங்கள் முழுப் பெயர், பிறந்த திகதி மற்றும் இடம், தேசியம், அடையாள இலக்கங்கள் தே.அ.அ, கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவை), வதிவிட மற்றும் அஞ்சல் முகவரிகள், தொலைபேசி மற்றும் கைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் போன்றவை. இந்த விபரங்கள் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், உங்களுடன் திறம்பட தொடர்பு கொள்ளவும், ஒழுங்குமுறை மற்றும் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் எங்களுக்கு உதவுகின்றன.*
- ***நிதிசார்ந்த தரவு:** உங்கள் கணக்கு இலக்கங்கள், கிரெடிட் மற்றும் டெபிட் கார்ட் இலக்கங்கள், பரிவர்த்தனை பதிவுகள், கணக்கு நிலுவைகள், கட்டண வரலாறு, கடன் வரம்புகள், கடன் மதிப்பெண்கள் மற்றும் கடன் இடர் மதிப்பீடுகள் உட்பட. உங்கள் தொழில் நிலை, சம்பளம், வருமான மூலங்கள் மற்றும் சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் பற்றிய தகவல்களையும் நாங்கள் சேகரிக்கலாம், இவை அனைத்தும் திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கான உங்கள் தகுதியை மதிப்பிடுவதற்கும், எங்களுடனான உங்கள் நிதி உறவை முகாமைத்துவம்செய்வதற்கும், ஒழுங்குமுறை மற்றும் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதற்கும் முக்கியமானவையாகும்.*
- ***பயன்பாடு மற்றும் விருப்பத்தேர்வுகள்:** உங்கள் திட்ட மற்றும் சேவை விருப்பத்தேர்வுகள், கணக்கு பயன்பாட்டின் அளவுகள் மற்றும் முறைகள், தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் தேர்வுகள், அத்துடன் எங்கள் பணிக்குழாமுடனான கருத்துக் கணிப்புகள் அல்லது தொடர்புகள் மூலம் வழங்கப்படும் பின்னூட்டங்கள் பற்றிய தகவல்கள். சாதன வகைகள், இயக்க முறைமைகள், இணைய உலாவி தகவல் (browser information) மற்றும் எங்கள் இணையத்தளம், செயலி அல்லது வேறு இணையவழி சேவைகளுடனான ஈடுபாடு உள்ளிட்ட எங்கள் டிஜிட்டல் தளங்களை நீங்கள் பயன்படுத்துவது பற்றிய விபரங்களையும் நாங்கள் சேகரிக்கிறோம்.*
- ***இணக்கம் மற்றும் பாதுகாப்புத் தரவு:** சரிபார்ப்பு ஆவணங்கள், தொடர்பாடல் பதிவுகள், சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை எச்சரிக்கைகள் மற்றும் கணக்காய்வுத் தடங்கள் போன்ற சிரத்தைகள், பணச்சலவை எதிர்ப்பு மற்றும் மோசடி தடுப்புக்குத் தேவையான பதிவுகளை இது உள்ளடக்கியது. முறைமை பாதுகாப்பைக் கண்காணிக்கவும், உங்கள் அடையாளத்தை இணையவழியில் சரிபார்க்கவும், அசாதாரண அல்லது அங்கீகரிக்கப்படாத செயல்பாடுகளைக் கண்டறியவும் குக்கீகள், பகுப்பாய்வு கருவிகள் மற்றும் அவற்றையொத்த தொழில்நுட்பங்களை நாங்கள் பயன்படுத்தலாம், இவை சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு பதிலளிக்க எங்களுக்கு உதவுகிறது.*

படிவங்கள், விண்ணப்பங்களை நிரப்புதல், விசாரணைகள் செய்தல் அல்லது கிளைகளுக்கு வருகைதருதல் போன்ற நேரடி தொடர்புகளுக்கு மேலதிகமாக, எங்கள் இணையத்தளம், கைபேசி செயலிகள், இணையவழி வங்கிச் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் உதவி அவரச இலக்கங்கள் உள்ளிட்ட டிஜிட்டல் வழிகள் மூலம் தகவல்களைச் சேகரிக்கலாம். இந்த ஊடகங்கள் உங்கள் தரவைப் பாதுகாக்க, உங்கள் அனுபவத்தைத் தனிப்பயனாக்க மற்றும் எங்கள் சேவைகளின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்த குக்கீகள், கண்காணிப்பு பிக்சல்கள் மற்றும் பாதுகாப்பான உள்நுழைவுகள் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.

தொழில்தருனர்கள், ஏனைய நிதி நிறுவனங்கள், கடன் குறிப்பு முகவர் நிலையங்கள், பொதுவில் அணுகக்கூடிய மூலங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட மூன்றாம் தரப்பு மூலங்களிலிருந்தும் தொடர்புடைய தகவல்களைப் பெறுகிறோம். இது உங்கள் தரவின் துல்லியத்தை சரிபார்க்கவும், தகுதியை மதிப்பிடவும், சட்டப்பூர்வ கடப்பாடுகளை நிறைவேற்றவும், எங்கள் சேவைகளின் ஒட்டுமொத்த தரத்தை மேம்படுத்தவும் எங்களுக்கு உதவுகிறது.

உங்கள் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு மிக முக்கியமானது, மேலும் அனைத்து தனிப்பட்ட தரவுகளும் அந்தரங்கத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் ஒவ்வொரு கட்டத்திலும் உங்கள் தகவலை சட்டப்பூர்வமாகப் பயன்படுத்துவதை உறுதி செய்து, தரவுப் பாதுகாப்புச் சட்டம் (PDPA) மற்றும் எங்கள் உள்ளக கொள்கைகளை கண்டிப்பாக கடைபிடிப்பதன் மூலம் கையாளப்படுகின்றன. எனவே, பின்வரும் அடிப்படைகளில் ஒன்று ஏற்புடையதாகாதவிடத்து உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் செயன்முறைப்படுத்த மாட்டோம்:

- உங்களுடன் ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற, உங்கள் வேண்டுகோளின் பேரில் ஏதேனும் முன்-ஒப்பந்த நடவடிக்கைகளை எடுப்பது உட்பட (உதாரணம்: வீட்டுக் கடனுக்காக நீங்கள் எங்களை அணுகும்போது நாங்கள் உங்களிடம் கடன் சோதனை நடத்தும்போது)
- சட்டத்தால் எங்கள் மீது விதிக்கப்பட்ட சட்டப்பூர்வ கடமைக்கு இணங்குவதற்கு. (உதாரணம்: 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் உள்ள தேவைகளுக்கு இணங்க, சந்தேகிக்கப்படும் பணச்சலவை மற்றும் பயங்கரவாத நிதி நடவடிக்கைகள் குறித்து நிதி புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்தல்)
- உங்கள் இணக்கத்துடன் (உதாரணம்: குறுஞ்செய்தி (SMS) மூலம் உங்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட திட்ட அளிப்புகளை ஊக்குவிக்க உங்கள் அங்கீகாரத்தை நாங்கள் கோரும்போது)
- எங்கள் சட்டபூர்வமான நலன்களுக்காக (உதாரணம்: மோசடியைக் கண்டறிய பரிவர்த்தனைகளை நாங்கள் கண்காணிக்கும்போது)
- பொது நலனுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு பணியின் செயலாற்றுகைக்காக

## 3. *உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வாறு பாதுகாக்கிறோம்*

*நாங்கள் சேகரிக்கும், சேமிக்கும், அனுப்பும் மற்றும் அகற்றும் தனிப்பட்ட தரவின் இரகசியத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் கிடைக்கும் தன்மையை உறுதி செய்வதற்காக தொழிற்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகளை நாங்கள் பின்பற்றுகிறோம். தனிப்பட்ட தரவு தவறாகப் பயன்படுத்துதல், இழப்பு மற்றும் அங்கீகரிக்கப்படாத அணுகல், மாற்றம் அல்லது வெளிப்படுத்தல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் நிறுவன நடவடிக்கைகளை நாங்கள் பின்பற்றுகிறோம்.*

## 4. *உங்கள் தனிப்பட்ட தரவை எவ்வளவு காலம் வைத்திருக்கிறோம்*

*உங்கள் தனிப்பட்ட தரவு எவ்வளவு காலம் தக்கவைக்கப்படுகிறது என்பதை தீர்மானிக்கும்போது, ஏற்புடைய ஒழுங்குமுறை சட்டகம், சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் வங்கியின் செயற்பாட்டுத் தேவைகளை நாங்கள் கருத்திற் கொள்கிறோம்.*

*எங்கள் உள்ளகக் கொள்கைகளின்படி, நீங்கள் எங்கள் வாடிக்கையாளராக இல்லாததிலிருந்து ஏழு (7) ஆண்டு காலப்பகுதிக்கு உங்கள் அடையாளத் தரவு மற்றும் நிதித் தரவை உள்ளடக்கிய வாடிக்கையாளர் தரவை வரம்பில்லாமல் தக்கவைக்க வேண்டும்.*

*இருப்பினும், தொடர்பாடல் பதிவுகள், சம்பாசனை வரலாறு மற்றும் இணைய குக்கீகள் போன்றவற்றில் 6 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான காலம் போன்ற குறுகிய தக்கவைப்பு காலத்தை நாங்கள் பின்பற்றலாம்.*

*இருப்பினும், பின்வரும் சூழ்நிலைகளில் உங்கள் தரவை 7 ஆண்டுகளுக்கும் மேலான காலத்திற்கு நாங்கள் வைத்திருக்கலாம்:*

- *நடந்துகொண்டிருக்கும் பிணக்குகள் அல்லது வழக்குகளுக்கு பதிலளிக்க.*
- *சட்ட மற்றும் ஒழுங்குமுறை கோரிக்கைகளுக்கு பதிலளிக்க, அவை சட்டப்பூர்வ பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்குள் இருக்கும்பட்சத்தில், மற்றும்*
- *ஆராய்ச்சி அல்லது புள்ளிவிபர நோக்கங்களுக்காக*

*தனிப்பட்ட தரவைச் சேகரித்து செயலாக்குவதற்கான நோக்கங்கள் நிறுத்தப்படும்போது, அத்தகைய தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பாக அழிக்க அல்லது நிரந்தரமாக அடையாளம் காணாமல் இருக்க அல்லது பெயர்குறிப்பிடப்படாமலிருக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

## 5. **உங்கள் தனிப்பட்ட தரவை வெளிப்படுத்துதல்**

*உங்கள் தரவை நாங்கள் அந்தரங்கத்தன்மையானதாக வைத்திருக்கிறோம், ஆனால் கீழே பட்டியலிடப்பட்டுள்ளவை போன்ற குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மூன்றாம் தரப்பினருடன் அதைப் பகிர வேண்டியிருக்கலாம்:*

- *இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் வெளிப்புற சேவை வழங்குநர்கள் (செயன்முறையாக்கம், சந்தைப்படுத்தல், விநியோகங்கள், ஆராய்ச்சி, கடன் அறவீடு போன்றவற்றுக்கு);*
- *சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட கணக்காய்வுகள் அல்லது இணக்கத் தேவைகளுக்காக இலங்கை மத்திய வங்கி போன்ற ஒழுங்குமுறை அமைப்புகள்;*
- *சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றதாக சந்தேகிக்கப்பட்டால் சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்கள்;*
- *நீதிமன்ற உத்தரவுகளின்படி உங்கள் தரவு கோரப்படும்போது நீதிமன்றங்கள்;*
- *கூட்டுறவு நிறுவனத்தால் வழங்கப்பட்ட கிரெடிட் கார்டுகளின் விடயத்தில் உங்கள் தொழில்தருனர்;*
- *திட்ட மற்றும் சேவை வழங்கல் அல்லது தகவலுக்காக கார்கில்ஸ் குழுமத்தில் தொடர்புடைய நிறுவனங்கள்;*
- *கடன் தகவல் பணியகம் போன்ற கடன் அறிக்கையிடல் முகவர் நிறுவனங்கள்.*
- *உங்கள் கோரிக்கையின் பேரில் குறிப்பிட்ட சேவைகளுக்கான வெளிப்பணி ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆளணி (உ-ம், அந்நியச் செலாவணி, முகாமைத்துவம்செய்யப்பட்ட நிதிகள்);*
- *உங்கள் தனிப்பட்ட தரவை அணுக எழுத்துமூலமாக நீங்கள் அதிகாரமளித்த வேறு எவரும்.*

## 6. **உங்கள் தனிப்பட்ட தரவை இலங்கைக்கு வெளியே பரிமாற்றுதல்**

*பல்வேறு செயற்பாட்டு மற்றும்/அல்லது சட்டத் தேவைப்பாடுகள் காரணமாக உங்கள் தனிப்பட்ட தரவு இலங்கைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு பரிமாற்றப்பட்டு சேமிக்கப்படலாம். தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) கீழ் வழங்கப்பட்ட அதே அளவிலான பாதுகாப்பு இல்லாத நாடுகளில் உங்கள் தனிப்பட்ட தரவு சேமிக்கப்படுவது இதில் அடங்கும். எனவே, இலங்கைக்கு வெளியே தனிப்பட்ட தரவை நாங்கள் பரிமாற்ற வேண்டியிருக்கும் போது, அத்தகைய பரிமாற்றம் PDPA இன் கீழ் ஏற்புடைய சட்டத் தேவைப்பாடுகளுக்கும் போதுமான அளவிலான பாதுகாப்பை உறுதி செய்யும் ஏனைய ஏற்புடைய சட்டங்களுக்கும் இணங்குவதை உறுதி செய்வோம்.*

7. **தன்னியக்க தீர்மானம் மேற்கொள்ளும் முறைமைகளின் பயன்பாடு**

எங்களுடனான உங்கள் உறவை வழங்கும்போது மற்றும்/அல்லது முகாமைத்துவம் செய்யும்போது எங்கள் செயற்பாட்டு கட்டமைப்பிற்குள் தன்னியக்க தீர்மானம் மேற்கொள்ளும் முறைமைகளை நாங்கள் செயற்படுத்தலாம். தன்னியக்க தீர்மானம் மேற்கொள்ளும் முறைமை என்பது மனித ஈடுபாடு இல்லாமல் தன்னியக்க பொறிமுறைகள் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அல்லது விவரக்குறிப்பைக் குறிக்கிறது. இந்த முறைமைகள் பொதுவாக எங்களால் நிறுவப்பட்ட குறிப்பான அளவுகோல்களின்படி தரவை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மனித முடிவெடுக்கும் செயன்முறைகளுக்கு உதவப் பயன்படுத்தப்படுகின்றன. எங்கள் திட்டங்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்தும்போது அல்லது உங்கள் தகுதி, இடர்நிலை மற்றும் விருப்பங்களை மதிப்பிடுவதற்கு இந்த முறைமைகளை நாங்கள் பயன்படுத்தலாம்.

8. **உங்கள் உரிமைகள்**

தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) கீழ் பின்வரும் உரிமைகளுக்கு நீங்கள் தகுதியுடையவர். அந்த உரிமைகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் பயன்படுத்த விரும்பினால், தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

| உரிமை | விபரம் |
|---|---|
| **அணுகல்** | உங்களைப் பற்றிய ஏதேனும் தகவலை நாங்கள் செயன்முறைப்படுத்துகிறோமா என்பதை உறுதிப்படுத்த உங்களுக்கு உரிமை உண்டு. நாங்கள் அவ்வாறு செய்தால், எங்கள் வசம் உள்ள தனிப்பட்ட தரவை அணுகுவதற்கு நீங்கள் கோரலாம். இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பான மேலதிக விபரங்களையும் நீங்கள் கோரலாம். |
| **ஆட்சேபனை** | எங்களது நியாயமான நலன்கள் அல்லது பொது நலன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உங்கள் தரவு செயன்முறையாக்கப்படுவதாக நீங்கள் நம்பினால், அத்தகைய நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவு எவ்வாறு செயன்முறையாக்கப்படுகிறது என்பதற்கு நீங்கள் ஆட்சேபனை தெரிவிக்கலாம். |
| **இணக்கத்தை மீளப்பெறல்** | ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உங்கள் தனிப்பட்ட தரவை செயன்முறைப்படுத்த உங்கள் இணக்கத்தைப் பெற்றிருந்தால், எந்த நேரத்திலும் அந்த இணக்கத்தைத் மீளப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. அந்த மீளப் பெறுதல் உங்கள் மீளப் பெறுதலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட செயன்முறையாக்க நடவடிக்கைகளைப் பாதிக்காது என்பதை நினைவில் கொள்ளவும். |

| | |
|---|---|
| **ஆவணத் திருத்தம்** | *நீங்கள் எந்தவொரு தவறான தனிப்பட்ட தரவையும் திருத்தக் கோரலாம் அல்லது முழுமையற்ற தரவை முழுமைப்படுத்துமாறு கேட்கலாம்.* |
| **அழித்தல்** | *தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை (PDPA) மீறி உங்கள் தரவை நாங்கள் செயன்முறைப்படுத்துகிறோம் என்று நீங்கள் நம்பினால், அல்லது உங்கள் இணக்கத்தை நீங்கள் மீளப் பெற்றிருந்தால், உங்கள் தனிப்பட்ட தரவை அழிக்குமாறு நீங்கள் கோரலாம். ஏற்புடைய சட்டங்களின்படி நீதிமன்ற உத்தரவின்படி தேவைப்படுத்தப்பட்டால், உங்கள் தரவை நாங்களும் அழிக்கலாம்.* |
| **தன்னியக்க தனிப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளுதல்** | *உங்களைப் பற்றிய எந்தவொரு தீர்மானமும் மனித ஈடுபாடு இல்லாமல் தன்னியக்க வழிமுறைகளால் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு உங்கள் உரிமைகள் அல்லது சுதந்திரங்களில் குறிப்பிடத்தக்க அல்லது நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தினால், அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய நீங்கள் கோரலாம்.* |
| **விலக்களிப்புகள்** | *தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) கீழ், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, செயற்பாட்டில் உள்ள சட்ட நடவடிக்கைகள், குற்றவியல் குற்றங்களைத் தடுத்தல் அல்லது வழக்குத் தொடுத்தல், மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள், தொழில்நுட்ப அல்லது செயற்பாட்டு சாத்தியவளம், உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதிருத்தல் அல்லது உங்கள் தரவைச் செயன்முறையாக்க வேண்டிய சட்டக் கடப்பாடுகள் உள்ளிட்ட குறிப்பான காரணங்களின் அடிப்படையில் உங்கள் கோரிக்கையை நாங்கள் சட்டபூர்வமாக மறுக்கலாம்.* |
| **தரவு பாதுகாப்பு ஆதிகாரசபையிடம் மேன்முறையீடு** | *அத்தகைய எந்தவொரு கோரிக்கை தொடர்பிலும் எங்கள் பதிலில் நீங்கள் அதிருப்தி அடைந்தால், இலங்கை தரவு பாதுகாப்பு ஆதிகாரசபையிடம் மேன்முறையீடு செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. மேன்முறையீடு செய்வது பற்றிய மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து அவர்களின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடவும்: www.dpa.gov.lk* |

*9.* **எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

ஏதேனும் மேலதிக தகவல் தேவைப்பட்டால் அல்லது உங்கள் உரிமைகளைப் பயன்படுத்த விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

எங்கள் உடனடி தொடர்பு இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம்: *0117640640*

எங்கள் ஏதேனும் கிளைகளுக்கு நேரில் வருகைதருவதன் மூலம்: *https://www.cargillsbank.com/ournetwork/*

தரவு பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்வதன் மூலம்: குசல கருணாரத்ன

மின்னஞ்சல்: *Kusala.k@cargillsbank.com*

தபால்: இல.*696*, காலி வீதி, கொழும்பு *3.*